**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only




Printed Matter

To

BOOK POST

If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**
**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



# கிறிஸ்து பிறப்பு (யல்தா) திருநாள் நல்வாழ்த்துக்கள்

மலர் 21 டிசம்பர் 2025 இதழ் 12

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.12.2025 | Monday | 6.00 pm | Feast Mass | Palavilai |
| 04.12.2025 | Thursday | 10.00 am | Diocesan Council | |
| 05.12.2025 | Friday | 9.00 am | UCC Meeting | Thuckalay |
| 07.12.2025 | Sunday | 8.00 am<br>3.00 pm | Mass<br>MCA-Symposium | Peruvazhikadavu<br>Pastoral Center |
| 09.12.2025 | Tuesday | 10.00 pm | Christmas gathering Priests of Marthandam Diocese | Bishop's House |
| 13.12.2025 | Saturday | 6.00 pm | Christmas Celebration | Neyveli |
| 16.12.2025 | Tuesday | 11.00 am<br>12.15 pm | Blessing of New Bishop's House<br>X'mas Gathering Inauguration of Mom | Kuzhithurai Diocese<br>MIDS |
| 20.12.2025 | Saturday | | Christmas Celebration | Thirunelveli |
| 21.12.2025 | Sunday | 2.00 pm | Upadesimar Gathering | Bishop's House |
| 22.12.2025 | Monday | 10.00 am<br>2.30 pm<br>6.30 pm | UCC - Christmas Celebration<br>UCCCT - Christmas Celebration<br>Minor Seminary Christmas Celebration | Kozhivilai<br><br>Elavuvilai |
| 23.12.2025 | Tuesday | 2.00 pm | Sarvodaya School - Christmas Celebration | Nalanchira |
| 24.12.2025 | Wednesday | | Christmas Mass | Adaikkakuzhi |
| 28.12.2025 | Sunday | 7.00 am<br>10.00 am<br>2.00 pm<br>3.30 pm | Feast Mass<br>Homily<br>Doctor's Meet - Marthandam Medical Mission<br>Jubilee Inauguration | Kannacode<br>Marankonam<br>HOM<br>Azhvarcoil |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 டிசம்பர் 2025 இதழ். 12




மலர். 22 நவம்பர் 2025 இதழ். 11


***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Cover Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*


***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*



**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the Diocese of Marthandam



மலர்.22 டிசம்பர் 2025 இதழ்.12

## முக்கியமான நாட்கள்

டிசம்பர் 2025

| | |
|---|---|
| 01 | உலக எய்ட்ஸ் தினம் |
| 02 | உலக கணினி எழுத்தறிவு தினம் |
| 03 | உலக மாற்றுத்திறனாளிகள் தினம் |
| 05 | சர்வதேச தன்னார்வலர் தினம் |
| 05 | உலக மண் தினம் |
| 06 | பி.ஆர்.அம்பேத்கரின் நினைவு நாள் |
| 09 | சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் |
| 10 | மனித உரிமைகள் தினம் |
| 11 | சர்வதேச மலை தினம் |
| 12 | உலகளாவிய சுகாதார பாதுகாப்பு தினம் |
| 18 | இந்தியாவில் சிறுபான்மையினர் உரிமைகள் தினம் |
| 18 | சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் |
| 20 | சர்வதேச மனித ஒற்றுமை தினம் |
| 22 | தேசிய கணித தினம் |
| 23 | தேசிய விவசாயிகள் தினம் |
| 24 | தேசிய நுகர்வோர் உரிமைகள் தினம் |
| 25 | கிறிஸ்துமஸ் தினம் |

## உள்ளடக்கம்


1. Circular 03
2. குருமட செய்திகள் 13
3. மிட்ஸ் –ஆய்வரங்கம் : குமரிமண்ணில் மலங்கரையின் சமூகப்பணி 14
4. MIDS 16
4. Health for One Million (Hom) 19
5. பெயர்விழா நல்வாழ்த்துக்கள் 20
6. MCA 21
9. திருமண ஆயத்தப்பயிற்சி 21
12. மறைவட்ட செய்திகள் 22
13. ஆயரின் நவம்பர் மாத நிகழ்வுகள் 25
14. இம்மாதம் நினைவு கூர 27
15. Bishop's Diary 28



*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852




# THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH


MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004


Prot. No. CLPr. 1/2025 18.11.2025

**சுற்றறிக்கை**

## திருவழிபாட்டு ஆண்டு : விளக்கம்
## 2025 செப்டம்பர் 20 - 2026 செப்டம்பர் 19 வரை

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே,*

மறுவொன்றிப்பின் நூற்றாண்டை கொண்டாட ஆயத்தமாகும் இத்தருணத்தில் 2025 செப்டம்பர் 20 முதல் 2026 செப்டம்பர் 19 வரையுள்ள ஓராண்டு காலத்தை திருவழிபாட்டு ஆண்டாக நாம் அனுசரிக்கிறோம். 10-09-2025 அன்று உங்களுக்கு வழங்கப்பட்ட சுற்றறிக்கையில் இவ்வாண்டில் பங்கு மற்றும் மறைவட்ட தளங்களில் அறிவுறுத்தப்பட்ட செயல்திட்டங்களை குறித்து விளக்கி, அவற்றை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன். இந்த ஆண்டை பயன் தரும் வகையில் கடைபிடிக்க வழிகாட்டுதலும் செயல்திட்டமும் அடங்கிய கையேடும், திருவழிபாடு பற்றிய கருத்துரைகள் அடங்கிய கையேடும் வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் இக்கையேடுகள் குருக்களுக்கு வழங்கப்படும். திருஅவை அளவில் 60 மறைவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குருக்களுக்கும் துறவியர்களுக்கும், பொதுநிலையினருக்கும் இரு நாட்கள் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இச்செயல்த் திட்டங்களை அனைத்து சகோதர குருக்களும் ஆர்வமுடன் பொறுப்பேற்று செயல்படுத்தி திருவழிபாட்டை அறிந்து அனுபவமாக்க இறைமக்கள் சமூகத்திற்கு உதவ வேண்டும்.

**பங்குதளத்திலுள்ள செயல்பாடுகள்**

1. ஒரு ஞாயிற்றுக்கிழமை (காலை முதல் மதியம் வரை, மதியம் முதல் மாலை வரை) ஒப்புரவு அருட்சாதனத்தை குறித்து வகுப்புகளெடுத்து தொடர்ந்து தூய நற்கருணை பிரசன்னதத்தில் ஒப்புரவு அருளடையாளத்திற்கான தயாரிப்பு திருச்சடங்கு நடத்தி, ஒப்புரவு அருட்சாதனம் வழங்கி திருப்பலி ஒப்புக்கொடுக்க வேண்டும். ஒப்புரவு அருட்சாதனத்திற்கு பக்கத்து பங்குகளின் குருக்கள் கிடைக்கும் வண்ணம் ஒழுங்குபடுத்தி மறைவட்ட அளவில் இதனை நடத்தும் தியதி முன்னதாக நிச்சயிக்க வேண்டும். இதற்கு முன்னதாகவே பங்குத்தந்தை இறைமக்களின் இல்லங்களை சந்தித்து முடிக்க வேண்டும்.

**வீடு சந்தித்தல்**

ஒப்புரவு அருட்சாதனம் கொண்டாடும் தினத்திற்கு முன்னதாக பங்குத்தந்தை பங்கின் எல்லா குடும்பங்களையும் சந்தித்து திருவழிபாட்டு ஆண்டைக் குறித்து மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். ஒரு அருட்சகோதரி மற்றும் 2 நற்செய்தி சங்க உறுப்பினர்களும் அடங்கிய ஒரு குழுமம் ஒவ்வொரு இல்லத்தையும் சந்தித்து இந்த ஆண்டின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்க வேண்டும். பங்கில் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகமானதாக இருந்தால் அதற்கேற்ப குழுக்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தாலம். ஒவ்வொரு மறைவட்டங்களிலுள்ள அருட்சகோதரிகளையும், நற்செய்தி சங்க உறுப்பினர்களையும் இப்பணிக்கான பொறுப்பை ஒப்படைக்கலாம்.

மறைவட்ட முதன்மை குரு இவற்றைக் குறித்து மறைவட்ட குருக்கள் கூடுகையில் கலந்தாலோசனை செய்து முடிவெடுக்கலாம்.



குடும்பங்களை சந்திக்கும் போது குடும்ப செபம், இறைவார்த்தையின் தியான வாசிப்பு, அருளடையாளங்களிலுள்ள செயல்பாட்டு பங்கேற்பு, நோன்பு, உபவாசம் போன்றவற்றைக் குறித்து வலியுறுத்த வேண்டும்.

மேற்கூறியவற்றைக் குறித்து அருட்சகோதரிகளுக்கும் நற்செய்தி சங்க உறுப்பினர்களுக்கும் தகவல் தரப்பட்டுள்ளது. மறைவட்ட முதன்மை குருவும், மறைவட்டத்தின் திருவழிபாட்டு ஆண்டு பொறுப்புவகிக்கும் அருட்தந்தையும் இணைந்து மறைவட்டத்திலுள்ள அருட்சகோதரிகளையும், நற்செய்தி சங்க உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து கலந்தாலோசனை செய்து ஒவ்வொரு பங்கிலும் வீடு சந்தித்தல் ஒழுங்குபடுத்த வேண்டும். ஒரு மறைவட்டத்தில் தேவையான அருட்சகோதரிகளும், நற்செய்தி சங்க உறுப்பினர்களும் கிடைக்கப்படவில்லையெனில் பிற மறைவட்டங்களிலிருந்து அழைத்துக் கொள்ளலாம்.

2. பங்குகளில் ஊறாறாவால் அலங்கரிக்கப்பட்ட தூய சிலுவை, ஏழு மெழுகுவர்த்திகளின் நடுவில் பிரதிஷ்டை செய்ய வேண்டும். ஞாயிறு திருப்பலி வேளையில் இந்த மெழுகுவர்திகளை எரிய வைக்க வேண்டும்.

3. பங்குகளில் ஒரு ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு முன் திருப்பலியைக் குறித்து ஒரு மணி நேர வகுப்பு நடத்தி தொடர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுக்க வேண்டும். எல்லா பங்குகளிலும் ஒரு ஞாயிற்றுக்கிழமை திருமுழுக்கு அருளடையாளத்தை ஆடம்பரமாக நடத்த வேண்டும். திருப்பலியின் மத்தியில் திருமுழுக்கை குறித்து அருளுரை வழங்க வேண்டும். எல்லா நம்பிக்கையாளர்களும் திருமுழுக்கில் பங்கேற்க வேண்டும்.

4. திருவழிபாட்டு ஆண்டில் ஒவ்வொரு பங்கிலும் நோயில்பூசுதல் அருளடையாளம் ஒரு முறை பொதுவாக நடத்தப்பட வேண்டும்.

அன்றைய திருப்பலியின் அருளுரை நோயில்பூசுதலைக் குறித்து நடத்த வேண்டும். இதற்காக பங்கிலுள்ள நோயுற்றோரை ஒருங்கிணைத்து பொதுவாக இந்த அருளடையாளத்தை நடத்த வேண்டும்.

5. MCCL, MCYM, MCMF, MCA போன்ற இயக்கங்களின் உறுப்பினர்களுக்கு சிறப்பாகவும், பங்கு சமூகத்திற்கு பொதுவாகவும் திருவழிபாடு பற்றிய படிப்பினைகளின் பயிற்சிகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

6. எல்லா பங்குகளிலும் பங்குத்தந்தையர்கள் நம்பிக்கையாளர் களுடன் இணைந்து சனிக்கிழமை மாலையில், மாலை மன்றாட்டு நடத்த தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

7. நோன்பு காலம் மற்றும் திருவிழா நாட்களில் ஒழுங்குப்படுத்தப் படும் நற்செய்தி பெருவிழாக்களில் நடத்தும் அருளுரைகள் திருவழிபாட்டு ஆண்டு மற்றும் அருளடையாளம் குறித்து அமைய வேண்டும்.

8. திருவழிபாட்டு ஆண்டில் திருவழிபாடு பற்றிய இணையதளக் கல்வி 50 தொகுதிகளாக மலங்கரை கத்தோலிக்க தொலைக்காட்சியில் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் தொடங்கும். இந்த நேரலைக் கல்வியில் ஒவ்வொரு பங்கிலிருந்தும் அதிகமானோர் பங்கேற்க பங்குத்தந்தை பங்குமக்களை ஊக்குவிக்க வேண்டும். 3 தேர்வுகள் பங்குகளில் வைத்து நடத்தி சான்றிதழ்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பங்கிலிருந்தும் இந்த கல்வியில் இணைபவர்களின் பெயர், அலைபேசி எண்ணும் மறைவட்ட திருவழிபாட்டு ஆண்டு இயக்குநரிடம் வழங்க வேண்டும்.

9. 2025 டிசம்பர் முதல் சுறியானி மொழிக் கல்வி மலங்கரை கத்தோலிக்க தொலைக்காட்சி வழியாக நேரலையில் நடத்தப்படும். இதில் பங்கேற்க நம்பிக்கையாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.



**மறைவட்ட அளவில் செயல்பாடுகள்**

மறைவட்ட அளவில் நடைபெறும் திருவழிபாட்டு ஆண்டு நிகழ்வுகளுக்கு பங்கு பிரதிநிதிகளை அனுப்பி வைக்க பங்குத்தந்தையர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டும். கீழ்வரும் நிகழ்வுகள் மறைவட்ட அளவில் நடத்தப்பட வேண்டும்.

1. மறைவட்ட அளவில் MCCL, MCYM, MCMF, MCA போன்ற இயக்கங்களின் பொறுப்பாளர்களுக்கு திருவழிபாட்டு ஆண்டு குறித்த பயிற்சிகளும், நடத்தப்பட வேண்டும் பங்கு பொறுப்பாளர்களும் ஆர்வமுள்ளவர்களும் இப்பயிற்சியில் பங்கேற்கலாம்.

2. எல்லா மறைவட்டங்களிலும் திருத்தூயகப் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

3. எல்லா மறைவட்டங்களிலும் கடந்த மூன்று ஆண்டுகளில் புதுநன்மை பெற்ற பிள்ளைகளுக்கு ஒப்புரவு, தூய நற்கருணை இவற்றை குறித்த பயிற்சி வகுப்புகள் வழங்க வேண்டும்.

திருவழிபாட்டு ஆண்டில் திருவழிபாட்டை அறிந்து அனுபவமாக்க திருச்சபை மக்கள் அனைவரும் முயற்சிக்க வேண்டும். அதற்காக இறைவேண்டல் செய்கிறேன். குருக்கள், துறவிகள் மற்றும் இறைமக்கள் இணைந்து செயல்பட அறிவுறுத்துகிறேன்.

இவண்,
ஆண்டவரில் உங்கள் எளிய ஊழியன்,

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
உயர் பேராயர் மலங்கரை கத்தோலிக்கத்
திருச்சபையின் காதோலிக்கோஸ்

காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்

# THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH

MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004

Prot. No. CL. 03/2025 24.11.2025

**சுற்றறிக்கை**

## மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவையில் புதிய ஆயர்கள்

***மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே,***

மலங்கரை சபையிலிருந்து கத்தோலிக்க திருச்சபையின் உறவொன்றிப்பிற்கு வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் தலைமையில் விசுவாசிகளின் குழுமம் ஒன்று கடந்து வந்தது. இது மறுவொன்றிப்பு இயக்கம் என அறியப்பட்டது. 1930-ம் ஆண்டு ஒன்றிப்பிற்குள் நுழைந்த இந்த இயக்கம் மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையாக வடிவமெடுத்தது. இந்த மாபெரும் நிகழ்வின் நூற்றாண்டை கொண்டாட நாம் தயராகி வருகிறோம். இரக்கம் மிகுந்த இறைவன் நம் திருச்சபைக்கு வழங்கும் அளவற்ற அருளையும் ஆசீரையும் நன்றியுடன் நினைவு கூர்வோம். திருவனந்தபுரத்தை மையமாகக் கொண்டு சுய ஆட்சி அதிகாரம் படைத்த திருச்சபையாக வளர்ந்து, திருப்பணி செய்து வரும் மலங்கரை கத்தோலிக்க திருச்சபை இந்திய கலாச்சாரத்தோடு கலந்து கீழை சபைகளின் மரபில் வேரூன்றி கத்தோலிக்க நம்பிக்கையில் வாழ்ந்து வளர்ந்து கொண்டிருக்கிறது. நூற்றாண்டு விழா கொண்டாட கடந்த ஆண்டு இறைவார்த்தை



ஆண்டை கொண்டாடி நம்மையே தயாரித்துக் கொண்டோம். இந்த ஆண்டு திருவழிபாட்டு ஆண்டு என சிறப்பிக்கிறோம். மறுவொன்றிப்புத் திருப்பணியானது தொடர்ந்து நடைபெறும் திருப்பணி. பிரிவுகளும் பிளவுகளும் நிறைந்த இவ்வுலகில் ஒன்றிப்பின் பாலமாக மாறவும் நம் சகோதரி சபைகளுக்கு நடப்புறவின் கரங்களை நீட்டவும் சமூக அமைதியின் கருவிகளாக மாறவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்தியா மற்றும் இந்தியாவுக்கு வெளியே வாழும் மக்களின் ஆன்மீக தேவைகளை முன்வைத்து திருத்தூதுவ பணிபுரிய ஆண்டவரின் நெஞ்சுக்கு உகந்த மேய்ப்பர்களை அவர் நமக்கு அருளுகின்றார். இத்தருணத்தில் நம் திருச்சபையின் திருப்பணிகளை நற்செய்தியின் அடிப்படையில் துரிதப்படுத்த இரண்டு புதிய ஆயர்களை இறைவன் நமக்குத் தந்துள்ளார்.

2025 செப்டம்பர் 19-ம் நாள் மதியத்திற்கு பின் 3.30 மணிக்கு அடூர் மார் இவானியோஸ் நகரில் வைத்து நடத்தப்பட்ட 95-ம் மறுவொன்றிப்பு மற்றும் திருச்சபை சங்கம நிகழ்வில் வைத்து மேதகு ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள், இறைமக்கள் சமூகம் அனைவர் முன்னிலையிலும் திருத்தந்தை 14-ம் லியோ ஏற்பளித்த நமது திருச்சபையின் புதிய மேய்ப்புப்பணி அமைப்பைக் குறித்தும், புதிய ஆயர்களின் நியமனம் குறித்தும் தெரிவித்திருந்தது உங்களுக்கு தெரிந்ததே. ஐரோப்பிய நாடுகளில் வாழும் மலங்கரை சுறியானி கத்தோலிக்க மக்களின் திருத்தூதர் சார் பார்வையாளராக பேரருட்தந்தை குரியாக்கோஸ் தடத்தில் அவர்களும், பேரருட்தந்தை ஜாண் குற்றியில் திருவனந்தபுரம் பேருயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராகவும் நியமனம் பெற்றனர்.

இங்கிலாந்து நாட்டில் மலங்கரை கத்தோலிக்க மறைப்பணித் தளங்களின் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டுக் கொண்டிருந்த

பேரருட்தந்தை குரியாக்கோஸ் தடத்தில் திருவல்லா மறைமாவட்ட அமையன்னூர் புனித மரியன்னை பங்கை சார்ந்தவர். இவர் கோட்டயம் மாவட்டத்தில் தடத்தில் குடும்பத்தில் திரு. தோமஸ், திருமதி. அன்னம்மா இவர்களின் மகனாக 1962-ம் ஆண்டு மார்ச் 27-ம் நாள் பிறந்தார். 1987-ம் ஆண்டு நினைவில் வாழும் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் ஆண்டகையின் திருக்கையால் திருவல்லா உயர்மறைமாவட்டத்திற்காக குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். உரோமை ஞ்ழ்ண்ங்ய்ற்ஹப் ஐய்ள்ற்ண்ற்ன்ங் ல் திருவழிபாட்டு இறையியலில் முனைவர் பட்டம் பெற்ற இவர் மலங்கரை உயர்குருத்துவ பயிற்சியகத்தில் பேராசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றினார். மேலும் திருவல்லா உயர் மறைமாவட்டத்தின் முதன்மை செயலராகவும் (Chancellor), நம்பிக்கை பயிற்சி பணிக்குழுவின் இயக்குநராகவும், திருச்சபையின் திருவழிபாட்டு பணிக்குழு செயலராகவும், திருச்சபையின் திருநிகழ்வுகளின் வழிகாட்டியாகவும் திருப்பணி செய்துள்ளார். 2025 நவம்பர் 1-ம் நாள் திருவல்லா புனித யோவான் பேராலயத்தில் வைத்து றம்பான் பட்டம் பெற்றுக் கொண்டார்.

திருவனந்தபுரம் பேருயர் மறைமாவட்டத்தின் முதன்மை செயலரும், மண்ணந்தலா புனித யோவான் பவுல் பங்கின் பங்குத்தந்தையும், இறையழைத்தலுக்கான ஆயர் மாமன்ற பணிக்குழுவின் செயலராகவும் பணியாற்றி வந்த பேரருட்தந்தை ஜாண் குற்றியில், கொல்லம் மாவட்டத்தில், கொட்டாரக்கரை கிழக்கேதெரு பங்கில் குற்றியில் குடும்பத்தில் திரு. ராஜன் திருமதி ஒமனா இவர்களின் மகனாக 1982 மேய் 30-ம் நாள் பிறந்தார். கிழக்கேதெரு பங்கை சார்ந்த இவர் அதிமேன்மை தங்கிய கர்த்தினால் மோறான் மோர் பசேலியோஸ் காதோலிக்கா பாவாவிடமிருந்து 2008-ல் குருப்பட்டம்



பெற்றுக்கொண்டார். உரோமை ஞ்ழ்ண்ங்ய்ற்ஹப் ஐய்ள்ற்ண்ற்ன்ங்-ல் திருச்சபை சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர் திருவனந்தபுரம் பேருயர் மறைமாவட்டத்தில் பல்வேறு பங்குகளில் பணி செய்தார். புனித அலோசியஸ் இளங்குருமட அதிபராகவும், பேருயர் மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி அறிவுரைக் குழுவின் குருக்கள் சார் செயலராகவும் திருப்பணி செய்த இவர் 2025 அக்டோபர் 22-ம் நாள் கிழக்கேதெரு மூவொரு இறைவன் ஆலயத்தில் வைத்து றம்பான் பட்டம் பெற்றுக் கொண்டார்.

இந்த இரண்டு ஆயர்களின் அருட்பொழிவு நிகழ்வு திருவனந்தபுரம் பட்டம் பேராலயத்தில் வைத்து 2025 நவம்பர் 22-ம் நாள் நடத்தப்பட்டது. நமது திருச்சபை ஆயர்களும் சீறோ மலபார் மற்றும் லத்தீன் திருச்சபை ஆயர்களும், சகோதரி சபைகளின் ஆயர்களும், குருக்களும் துறவிகளும் இறைமக்களும் திருச்சடங்குகளில் பங்கேற்றனர். மலங்கரை மார் தோமா சுறியானி திருச்சபையின் தலைவர் மேன்மைதங்கிய பேராயர் தியோடோசியஸ் மார் தோமா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கோட்டயம் மறைமாவட்டத்தின் பேராயர் மார் மாத்தியு அருளுரை வழங்கினார். மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும் தந்தையுமாகிய காதோலிக்க பாவா அருட்பொழிவு சடங்குகளுக்கு தலைமை வகித்தார். திருவல்லா பேராயர் மேதகு தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகையும், பத்தேரி மறைமாவட்டத்தின் ஆயர் ஜோசப் மார் தோமஸ் ஆண்டகை அவர்களும் அருட்பொழிவில் துணையாளர்களாக இருந்தனர். 40 ஆயர்களும், 60-க்கும் மேற்பட்ட முக்கியஸ்தர்களும், ஆயிரக்கணக்கான மக்களும் திருச்சடங்குகளில் பங்கேற்றனர். மலங்கரை சுறியானி பாரம்பரியத்தில் பேரருட்தந்தை குரியோக்கோஸ் தடத்தில் ஆபூன்

குறியாக்கோஸ் மார் ஓஸ்தாத்தியோஸ் என்ற பெயரிலும், பேரருட்தந்தை ஜாண் குற்றியில் ஆபூன் யூஹானோன் மார் அலெக்ஸியோஸ் பெயரிலும் ஆயர்களாக அருட்பொழிவு பெற்றனர். இந்த இரண்டு ஆயர்களின் திருத்தூதுவ திருப்பணிகள் நம் இறைமக்கள் சமூகத்திற்கு ஆசீராக அமையட்டுமென வேண்டுகிறேன்.

மேதகு ஆயர் குரியாக்கோஸ் மார் ஓஸ்தாத்தியோஸ் அவர்களின் ஐரோப்பாவிலுள்ள திருப்பணியின் ஆரம்பம் 2025, டிசம்பர் 6-ம் நாள் இங்கிலாந்தில் லயிசெஸ்டரில் வைத்து நடத்தப்படுகிறது. இத்திருச்சடங்கில் நானும் திருச்சபையின் சில ஆயர்களும், ஐரோப்பாவில் வாழும் நம் இறைமக்களுக்கு பணிவிடை புரியும் குருக்களும், துறவிகளும் பங்கேற்கின்றார்கள். மேதகு ஆயர்களுக்காகவும் அவர்களின் திருப்பணி சிறக்கவும் அனைவரும் இறைவேண்டல் செய்ய வேண்டுமென்று அன்புடன் நினைவு படுத்துகிறேன்.

*இவண்,*
ஆண்டவரில் உங்கள் எளிய பணியாள்

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவையின்
உயர்பேராயர் - காதோலிக்கோஸ்

காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்



# குருமட செய்திகள்

- 2025 நவம்பர் மாதம் 11-ஆம் தேதி, மறைமாவட்ட ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் அருட்சகோதரர்களை சந்தித்து, திருவழிபாட்டு ஆண்டு குறித்து ஒரு வகுப்பை வழங்கினார் அத்தோடு ஒரு சில அறிவுரைகளையும் வழங்கினார்.
- இவாண்டிற்கான விளையாட்டு போட்டிகள் 2025 நவம்பர் மாதம் 15-ஆம் தேதி (சனிக்கிழமை) சூரியகோடு விளையாட்டு மைதானத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்நிகழ்வை அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் துவக்கி வைத்தார். மறுநாள் முதல் கலைப்போட்டிகளும் குருமடத்தில் வைத்து நடைபெற்றது.
- இம்மாத மாதாந்திர தியானம் 2025 நவம்பர் 21-ஆம் தேதி நடைபெற்றது. இத்தியானத்தை அதிபர் தந்தை சிபி அவர்கள் சிறப்பாக வழிநடத்தினார்.

மிட்ஸ்

# ஆய்வரங்கம் : குமரிமண்ணில் மலங்கரையின் சமூகப்பணி

மறைமாவட்டத்தின் சமூகப்பணி அலகாகிய மிட்ஸ் இறையாட்சியை கட்டியமைப்பதில் குமரி மண்ணில் எவ்வாறு முனைந்திருக்கிறது என்று ஆய்ந்து, பங்குகளில் பங்குதந்தையர்கள், மிட்ஸ் சமூகப் பணி நிறுவனத்தோடு இணைந்து எவ்வாறு பணியாற்ற இயலும் என்ற நோக்கில், ஓர் ஆய்வரங்கம் நடைபெற்றது. 25.11.2025 அன்று காலை 9.30 மணிக்கு இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அடிகளார் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். தொடர்ந்து ஆயர் அவர்கள் தலைமையுரையில் ஏழைகள் மீதான விருப்ப முன்னுரிமை என்பது திருச்சபைக்கு புதிய சிந்தனை இல்லை. காலங்காலமாக திருஅவைத் தந்தையர்கள் மற்றும் திருத்தந்தையர்கள் வலிறுத்தி வருவதை குறிப்பிட்டு விளக்கினார்கள். மேலும் வறுமையின் புதிய வடிவங்களை நாம் கண்டுகொள்ள வேண்டும் என்பதை கேட்டுக்கொண்டார்கள். பின்னர் மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் மிட்ஸ் நிறுவன பணிகள் குறித்து தொகுத்து வழங்கினார்கள்.

தொடர்ந்து, ஆய்வரங்க வழிகாட்டி அருட்பணி பரத் அவர்களால் சமூக சேவை மற்றும் சமூக பணியின் வேறுபாடு



குறித்தும், நாம் கண்டுகொள்ளப்படாத ஏழைகளை கண்டு கொள்ள வேண்டும். இறைவார்த்தையை மட்டுமல்ல, அயலானையும் கண்டுகொள்ள வேண்டும்: புனித பிரான்சிஸ் அசிசியாரை நாம் மாதிரியாக கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நமக்கு பல கட்டமைப்புகள் இருக்கின்றன. அவற்றின் வழியாக பிறருடைய வலிகளை கண்டுகொள்ள வேண்டும். அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்வோம். எத்தகைய பார்வையை நாம் கொண்டிருக்கிறோம். புனிதர்கள் ஏழைகளாக மாறினார்கள். நம்முடைய சொல்லும் செயலும் ஒன்றுபோல் இருக்க வேண்டும். நம்முடைய அடையாளங்கள் ஏழைகள் போல் இருக்கின்றனவா? என்ற பல சிந்தனைகளை விதைத்தார்.

அருட்தந்தை எட்வின் அவர்கள், பிரச்சினைகளின் அடிவேரை கவனிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக நாம் இருக்க வேண்டும். அதற்காக அக்கம் பக்கம் பாராளுமன்றம் உதவும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சின்ன சின்ன தளங்கள் அதாவது குழுக்கள் உருவாக வேண்டும். அப்போது தான் அவர்களது சிறு குரல்களும் கேட்கப்படும்.

பின்னர் அருட்பணியாளர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் இணைந்து ஆறு குழுக்களாக பிரிக்கப்பட்டு, ஆறு விதமான சிந்தனைகள் விவாதிக்கப்பட்டன.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## மிட்ஸ் மரியன் இயக்கம்

மிட்ஸ் மரியன் இயக்கத்தின் சார்பாக மிட்ஸ் பணிமண்டலத்திற்குட்பட்ட கைம்பெண்களின் மேம்பாட்டிற்கான கருத்தமர்வு கூடுகையானது 12.11.2025 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தை நாகப்பட்டினம் கலங்கரை நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை குழந்தைசாமி அவர்கள் வழிநடத்தினார்கள். மிட்ஸ் பணிமண்டலங்களுக்குட்பட்ட கைம் பெண்களின் நல்வாழ்விற்காக அவர்களின் தரவுகளை சேகரித்ததின் அடிப்படையில் தற்போது 1045 கைம்பெண்கள் பதிவாகியுள்ளனர். இவர்களுடைய தேவைகள் மற்றும் உரிமைகள் குறித்தான தரவுகளின் அடிப்படையில் இந்த அமர்வு நடைபெற்றது. இதில் மிட்ஸ் இயக்குநர் கைம்பெண்களின் தற்போதைய நிலை என்ன? என்பதை ஒளிப்படம் வாயிலாக சுட்டிக்காட்டினார். மிட்ஸ் மரியன் இயக்கத்தின் செயல்பாட்டு நுணுக்கங்களை மிட்ஸ் திட்ட அலுவலர் அவர்கள் விவரித்தார்கள். பின்னர் பணியாளர்கள் நான் குகுழுக்களாக பிரிக்கப்பட்டு பெறப்பட்ட தரவுகள் தொடர்பான நான்கு தரவுகளை மையபடுத்தி அடுத்த கட்ட நகர்விற்கான கலந்தாய்வு நடைபெற்றது. இதில் ஒத்த கருத்துக்களை தொகுத்து கைம்பெண்களை சமூகத்தில் மதிக்கத்தக்க மக்களாக மாற்றவேண்டிய ஆயத்த செயல்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்த கருத்தமர்வு கூடுகையில் மிட்ஸ் பணியாளர்கள் உட்பட 30 நபர்கள் கலந்துகொண்டார்கள்.

## மிட்ஸ் தளிர்கள் உலகம்

மிட்ஸ் தளிர்கள் உலகம் பயனாளிகளின் குழந்தைகள் தினவிழாவானது 15.11.2025 அன்று மிட்ஸ் அரங்கத்தில் வைத்து காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. அன்றையதின கருப்பொருளாக “எனது நாள், எனது உரிமைகள்” என்ற தலைப்பு மையப்படுத்தப்பட்டது.



குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் பல்வேறு திறமைகளை வெளிக்கொணரும் விதமாக எழுத்து மற்றும் ஓவியத் திறன் வளர் போட்டிகள் நடைபெற்றன. தொடர்ந்து, மிட்ஸ் தலைவர் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அடிகளார் தலைமையில் குழந்தைகள் தின பொதுக்கூட்ட நிகழ்வானது நடைபெற்றது. தலைவர் தமது உரையில் தளிர்கள் திட்ட பயனாளிகள் நல்லபிள்ளைகளாகவும், திறமை யுடையவர்களாகவும், ஆரோக்கியமானவர்களாகவும், திகழவேண்டும் என்று கூறினார்கள். மிட்ஸ் இயக்குநர் முனைவர் ஜெறோம் அடிகளார் ‘எனது நாள், எனது உரிமைகள்’ என்ற தலைப்பில் துவக்கவுரை யாற்றினார்கள். செல்வி. ஆன்சிலின் செனி குழந்தைகள் தின சிறப்பு செய்தியை பகிர்ந்தார்கள். ஆசிரியர் திருமதி ஜெய்சி அவர்கள் குழந்தைகளுக்கு சிறப்பு சிந்தனை கருத்துக்களை கதைகள் வாயிலாக எடுத்துக்கூறினார். மேலும் 10-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 90% மதிப்பெண்களோடு வெற்றிபெற்ற 3 குழந்தைகளுக்கு ஊக்கப்பரிசும் வழங்கப்பட்டது. மட்டுமல்லாமல் கிறிஸ்மஸ் நாட்களை எப்படி பயனுள்ள பொழுதாக கழிக்கவேண்டும் என்பதை குறித்தான ஒரு அட்டவணை தயார் செய்து அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டது. நிகழ்வுகளை மெருகூட்டும் விதமாக குழந்தைகளின் கலைத்திறன் நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. இந்த விழாவில் 159 குழந்தைகளும், 122 பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.

## உதவித்திட்டங்கள்

1. 01.11.2025 அன்று All for Life Life for All திட்டத்தின் வழியாக மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 27 உறுப்பினர்களுக்கு ஆடு வளர்த்தல் தொழிலுக்காக நபருக்கு ரூபாய் 10,000/- வீதம் ரூபாய் 2,70,000/- வழங்கப்பட்டது.

2. 19.11.2025 அன்று மார்த்தாண்டம் பணிமண்டலத்தின் கீழ் செயல்படும் 14 சுய உதவி குழுக்களில் உள்ள 56 உறுப்பினர்களுக்கு ரூபாய் 28,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.

### பிறநிகழ்வுகள்

1. 05.11.2025 முதல் 07.11.2025 வரை கோவளத்தில் வைத்து விண்ணைத்தொடு திட்டத்தின் சார்பாக DIP (Detailed Implementation Plan) & MEAL (Monitoring Evaluation Accountability Learning) workshop நடைபெற்றது. இந்த கூட்டத்தில் விண்ணைத்தொடு திட்ட பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

2. 07.11.2025 அன்று கோல்பிங் தினகொண்டாட்டத்தை குறித்து மதிப்பீடு செய்வதற்காக கோல்பிங் செயற்குழு கூட்டமானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் கோல்பிங் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

3. 10.11.2025 அன்று பெடரல் வங்கியில் இருந்து வங்கி கடன் பெறும் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு வங்கி பணியாளர்கள் திரு. ஜினு குரூப் மற்றும் திருமதி அர்ச்சனா ஆகியோர் பயிற்சியும், வழி காட்டுதல்களும் வழங்கினார்கள். மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற இந்த பயிற்சியில் 50 சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

4. 14.11.2025 அன்று குழித்துறை அன்னம்மாள் மருத்துவமனை சார்பில் இலவச பொது மருத்துவ முகாம் மிட்ஸ் அரங்கத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த முகாமில் சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் போன்ற பரிசோதனைகள் நடத்தப்பட்டன. மேலும் மக்களுக்கு விழிப்புணர்வு அளிப்பதற்காக மருத்துவ மாணவர்கள் பல்வேறு நிகழ்வுகளை நடத்தி காட்டினார்கள். இந்த முகாமில் மொத்தம் 42 சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



## HEALTH FOR ONE MILLION (HOM)
### Diocese of Marthandam

- நவம்பர் 15, 2025 அன்று உலக நீரழிவு நோய் தின விழிப்புணர்வு கூட்டம் இறச்சகுளம் பெண்கள் சுயஉதவிக்குழுவில் வைத்து நடைபெற்றது. இதில் HOM அமைப்பாளர் திருமதி வசந்தா, திரு. லிஸ்பின் அவர்கள் கலந்துகொண்டார்கள்.
- நவம்பர் 19, 2025 அன்று உலக நீரழிவு நோய் தின விழிப்புணர்வு கூட்டம் உண்ணாமலைக்கடை பங்கில் வைத்து நடைபெற்றது. இதில் HOM அமைப்பாளர் திருமதி லதா மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள்.
- நவம்பர் 20, 2025 அன்று MMM சார்பாக மார்த்தாண்டம் மறைமாவட்ட மருத்துவர்கள் கருத்தரங்கிற்கான ஆலோசனை கூட்டம் குழித்துறை HOM அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இதில் HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார், MMM உறுப்பினர்கள் & அருட்சகோதரி ஐஸ்வர்யா அவர்கள் கலந்துகொண்டார்கள்.

# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை
**அனிஷ்**
**டிசம்பர் 03**



அருட்தந்தை
**சபின்**
**டிசம்பர் 03**



அருட்தந்தை
**மரிய அற்புதம்**
**டிசம்பர் 08**



அருட்தந்தை
**மரியதாசன்**
**டிசம்பர் 08**



அருட்தந்தை
**ஏசுதாஸ்**
**டிசம்பர் 25**



அருட்தந்தை
**பார்பெல்லோ கிறிஸ்டஸ்**
**டிசம்பர் 25**



அருட்தந்தை வினு இம்மானுவேல்
**டிசம்பர் 25**



அருட்தந்தை **ஜாண். எஸ்**
**டிசம்பர் 27**



அருட்தந்தை
**அருள்தாஸ்**
**டிசம்பர் 27**



அருட்தந்தை
அருள்ஷைஜு
**டிசம்பர் 27**



அருட்தந்தை
**ஜெபின் ஜாண்**
**டிசம்பர் 27**



# MCA
## Diocese of Marthandam

- புதிய மறைபரப்புத்தளமான J.J. நகர் (திருநெல்வேலி மாவட்டம்) என்ற இடத்தில் புது ஆலய கட்டுமான பணிக்கான ஆயத்தப் பணிகள் குறித்து ஆராய 2025 நவம்பர் மாதம் 8-ம் தேதி அன்று சபாதல பொறுப்பாளர்கள் குறிப்பாக தலைவர், செயலர், பொருளர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் நமது மறைமாட்ட பொறுப்பாளர்களள் பார்வையிடப்பட்டது. முதலில் அவர்கள் அனைவரும் நமது ஆயர் இல்லம் சென்று ஆயரைச் சந்தித்து ஆசி பெற்றனர். இந்த மறைபரப்பு தளத்தில் புது ஆலயம் கட்ட சபாதல MCA ரூ. 10,00,000/- (பத்து இலட்சம்) வழங்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**2025 டிசம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **12, 13** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

மார்த்தாண்டம் மறைவட்டம் சார்பாக திருவழிப்பாட்டு ஆண்டின் முதல் நிகழ்வாக பயிற்ச்சி வகுப்புகள் மலங்கரை கத்தோலிக்க திருவழிபாட்டு இறையியல் பின்னணி மற்றும் விவிலிய பின்னணி என்ற தலைப்பில் மூன்று மண்டலங்களில் (மார்த்தாண்டம், தேமானூர், விமலபுரம்) வைத்து 30.11.2025 ஞாயிற்றுகிழமை மதியம் 3 மணி முதல் 5 மணிவரை நடைபெற்றது. மூன்று பிரிவினர்களுக்காக (பொதுநிலையினர், இளையோர் மற்றும் விசுவாச பயிற்சி) வகுப்புகள் நடத்தப்பட்டது. மூன்று மண்டலங்களிலும் சேர்த்து சுமார் 325 நபர்கள் இந்த பயிற்சி முகாமில் பங்கெடுத்தார்கள். மறைவட்ட குருக்கள் தங்களுடைய மண்டலங்களில் எல்லாவற்றையும் ஒழுங்கமைத்தும், வருகை புரிந்தும், வகுப்புகள் எடுத்தும் இப்பயிற்சி வகுப்பை சிறப்பித்தார்கள். மறைவட்ட அருட்சகோதரிகளும், மேய்ப்புப்பணி பொறுப்பாளர்கள் மற்றும் எல்லா இயக்கங்களின் பொறுப்பாளர்களும் பங்கெடுத்து சிறப்பித்தார்கள்.

## அழகியமண்டம் மறைவட்டம்

❖ நவம்பர் மாதம் 2-ம் தேதியன்று புனித விண்ணேற்பு அன்னை மலங்கரை கத்தோலிக்க ஆலயம் பிலங்காலை மற்றும் புனித ஜார்ஜியார் மலங்கரை கத்தோலிக்க ஆலயம் பூந்தோப்பு ஆகிய பங்குகளினுடைய பணிப்பொறுப்பை பேரருட்தந்தை மரியஜாண் அவர்கள் அருட்தந்தை அருள்ஷைஜுவிடமிருந்து பெற்றுக்கொண்டு அழகியமண்டபம் மறைவட்ட குழுமத்தில் இணைந்தார்கள்.

❖ அழகியமண்டபம் மறைவட்டம் குருக்கள் கூடுகையானது நவம்பர் 17-ம் தேதியன்று பிலங்காலை புனித விண்ணேற்பு அன்னை மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.



## குலசேகரம் மறைவட்டம்

❖ குலசேகரம் மறைவட்ட குருக்களுக்கான கூடுகை மாத்தார் புனித சூசையப்பர் ஆலயத்தில் வைத்து 11 -ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலையில் நடத்தப்பட்டது. மறைவட்ட குருக்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டனர். மாலை 6.30 மணிக்கு வருகை தந்தனர். தொடர்ந்து மாலை ஜெபமும் அதனைத் தொடர்ந்து குருக்களின் கலந்தாலோசனையும் இறுதியில் இரவு உணவுடன் கூடுகை இனிதே நிறைவு பெற்றது.

❖ திருவழிபாட்டு ஆண்டு நமது மறைவட்டத்தில் 16-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.30 மணியளவில் செருப்பாலூர் இயேசு மரியா திருஇருதய ஆலயத்தில் வைத்து ஆரம்பிக்கப்பட்டது. மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை பிராங்களின் அவர்கள் ஆசீர்வதித்து நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்கள். தொடர்ந்து ஆராதனை முறையிலான வரவேற்புடன் திருசிலுவையானது நிறுவப்பட்டது. இத்திருநிகழ்வுகளில் மறைவட்ட குருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டு நிகழ்வுகளை நன்முறையில் சிறப்பித்தனர்.

❖ மறைவட்ட மேய்ப்புபணி அறிவுரை குழு கூட்டமானது 16 -ம் தேதி மாலை 4.30 மணி அளவில் செருப்பாலூர் இயேசு மரியா திருஇருதய ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மறைவட்ட தினம் வருகின்ற ஜனவரி மாதம் கொண்டாடுவதாக தீர்மானிக்கப்பட்டு அதற்கு தேவையான ஏற்பாடுகளும் ஒழுங்குங்களும் செய்யப்பட்டன.

❖ மாத்தார் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள மேரி மக்கள் துறவற கன்னியர் இல்லத்தின் சிற்றாலயமானது நமது மறைவட்ட ஆயர் மேதகு வின்செண்ட்மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களால் 29 -ம் தேதி காலை 7 மணி அளவில் அர்ச்சிக்கப்பட்டது.

❖ சாரூர் இயேசுவின் திருஇருதய ஆலய கட்டுமான பணிகளை முன்னிட்டு 16-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை உணவு திருவிழா மற்றும் சிறப்பு ஏலம் நடத்தப்பட்டது.

# நாகர்கோவில் மறைவட்டம்

❖ நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் மாதாந்திர கூடுகை மற்றும் நவம்பர் மாத தியானமானது 10.11.2025 அன்று மத்தியாஸ்நகர் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. இம்மாத தியான சிந்தனையாக, சமீபத்தில் கத்தோலிக்க திருஅவையால் தெளிவு படுத்தப்பட்ட மாதாவைக் குறித்தான 1. Mother Mary as Co-Redeamer, 2. Mother of Graces, 3. Mediatrix of all Graces என்ற தலைப்புகளைப் பற்றி சிந்தித்து தெளிவு படுத்தப்பட்டது.

தொடர்ந்து மறைவட்ட குருக்களின் பணிப்பொறுப்புகளின் அனுபவ பகிர்வு மற்றும் மறைமாவட்ட பொது அறிவிப்புகள் வழங்கப்பட்டது. மிக முக்கியமாக,

## 1. திருவழிபாட்டு ஆண்டு

இவ்வருட மைய சிந்தனையாகிய திருவழிபாட்டு ஆண்டை எப்படி மறைவட்டத்தில் சிறப்பிக்கலாம் என சிந்திக்கப்பட்டது. அதன்படி ஒவ்வொரு குருக்களும் ஒவ்வொரு திருவருட்ச சாதனங்களை குறித்தும், திருப்பலி விளக்கவுரை, மற்றும் ஆலய பயன்பாட்டு பொருட்களின் விவிலிய மற்றும் பாரம்பரிய பின்னணி, இவைகளை குறித்து தெளிவான தயாரிப்பு நடத்தி மறைவட்ட ஆலயங்களில் வகுப்புகள் எடுக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

## 2. மறைவட்ட தின விழா

புனித தேவசகாயத்தை விண்ணக பாதுகாவலராக கொண்ட இம்மறைவட்ட தின விழாவை ஜனவரி மாதம் 18-ம் நாள் நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்து மதிய உணவுடன் கூடுகை இனிதே நிறைவுற்றது.



# ஆயரின் நவம்பர் மாத நிகழ்வுகள்



- 9-14 ➢ திண்டுக்கல் மறைமாவட்ட குருக்களுக்கு ஆண்டு தியானத்தை வழிநடத்தினார்.
- 15 ➢ மறைபரப்புப் பணி நிலையத்தில் வைத்து திருவழிபாட்டு ஆண்டினை முன்னிட்டு நடைபெற்ற பொதுநிலையினருக்கான இரு நாள் வகுப்பினை துவக்கி வைத்தார்,
- 15 ➢ MIDS தளிர்கள் உலகம் சார்பாக நடைபெற்ற குழந்தைகள் தின விழா நிகழ்வினில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.
- 16 ➢ நடைக்காவு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 17 ➢ படந்தாலுமூட்டில் புதிதாக அமையப்பெற்ற SMART Walk மருத்துவமனையை திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.
- 21 ➢ கிராத்தூர் மேல்நிலைப்பள்ளி ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்.
- 21 ➢ பாலவிளை பள்ளி ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்.
- 22 ➢ புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட ஆயர்களின் திருநிலைப்பாட்டு திருச்சடங்கில் கலந்து கொண்டார்.

23 ➤ மார்த்தாண்டம் பேராலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

23 ➤ அடைக்காகுழியில் வைத்து நடைபெற்ற கிறிஸ்து அரசர் பேரணியில் கலந்து கொண்டு அருளுரையாற்றினார்.

25 ➤ கழுவன்திட்டை MIDS -ல் வைத்து குருக்கள் மற்றும் MIDS பணியார்களுக்காக நடைபெற்ற ஒரு நாள் கலந்துரையரங்கத்தில் கலந்து கொண்டு ஆசியுறை வழங்கினார்.

26 ➤ மார்த்தாண்டம் மேரிமக்கள் கன்னியர் இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.

28 ➤ மாத்தார் கன்னியர் இல்லத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிற்றாலயத்தை ஆசீர்வதித்தார்.

29 ➤ மரியகிரி புனித மரியன்னை CBSE பள்ளி ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு ஆசீர்வதித்தார்.

29 ➤ விமலபுரம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி ஆசீர்வதித்தார்.

30 ➤ புத்தூர் ஆலயத்தில் மறைந்த அருட்தந்தை மாத்தியூ கடகம்பள்ளி அவர்களின் நினைவு திருப்பலியினை அற்பித்து கல்லறையில் தூபமன்றாட்டும் நடத்தி செபித்தார்.

30 ➤ வாவறை வட்டார ஐக்கிய கிறிஸ்தவர் பேரணி சார்பாக நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்,

30 ➤ மேக்கோடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறைமக்களை ஆசீர்வதித்தார்.



## இம்மாதம் நினைவு கூர

டிசம்பர் 2025

1 – இருபத்தைந்து நோன்பு ஆரம்பம்

3 – புனித பிரான்சிஸ் சவேரியார்


3


4 – தமஸ்கு நகரத்து மார் யோவான்

5 – மார் சாபாஸ், அலெக்ஸாந்திரியகாரராகிய மார் கிளீமிஸ்

6 – அந்தியோக்கியக்காரராகிய மார் தியோபிலோஸ்

7 – புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு
புனித அம்புறோஸ்

7


8 – புனித கன்னிமரியாவின் அமலோற்பவத் திருநாள்

10 – மார் பஹனானும் சகோதரி சாறாளும் 40 இரத்தசாட்சிகளும்

14 – புனித யோசேப்புக்குக் கிடைத்த காட்சி
புனித சிலுவை யோவான்
புனித ஆபிரகாம் கிதுனோயோ

8


16 – மார்த்தாண்டம் மறைமாவட்டம் உதயமான நாள் (1996)

17 – மார் இரபுலா

18 – மயிலாப்பூர் அற்புத சிலுவை

21 – யல்தாவுக்கு முன்னைய ஞாயிறு
விவிய ஞாயிறு

25


25 – யல்தா திருநாள் (கிறிஸ்துமஸ்)

26 – தூய இறையன்னையின் புகழ்ச்சி

27 – குழந்தைகள் கொலையுண்ட தினம்

26


28 – யல்தாவுக்குப்பின் முதல் ஞாயிறு
அரசரும் இறைவாக்கினருமான தாவீது

## மிட்ஸ்~ஆய்வரங்கம் : குமரிமண்ணில் மலங்கரையின் சமூகப்பணி



## குருமட செய்திகள்



## MIDS



## HOM Special School



## MCA



## மறைவட்ட செய்திகள்

